1975 அக்டோபர் 31]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதுபற்றி தகவல் இல்லை. நஷ்டயீடு இதுவரை கொடுக்கப்படாமல் இருந்தால், அங்கத்தினருடைய கேள்வியை வைத்தே விரைவில் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த ஏரியைப் புதுப்பித்த பிறகு எவ்வளவு ஏக்கர் பாசன வசதி கிடைக்கும்? எவ்வளவு உணவுப் பொருள் உற்பத்தியாகும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அந்த விவரம் இல்லை; தனிக் கேள்வி போடவும்.

ஆந்திர மாநிலத்திலிருந்து நெல் அன்பளிப்பு

* 155 **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆந்திர மாநில விவசாயிகள் தமிழ்நாட்டு வறட்சி நிவாரணப் பணிகளுக்காக நெல்லும், வைக்கோலும் அன்பளிப்பாகத் தர முன்வந்துள்ளனரா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) ஒரு மாநிலத்தில் இருந்து மற்ற மாநிலங்களுக்கு அரிசி போக்குவரத்துத் தடை இருப்பதினால், ஆந்திர மாநில விவசாயிகள் தமிழ் நாட்டுக்கு தர விழைந்த நெல்லை, மத்திய அரசு அனுமதிக்கவில்லை. ஆந்திரா மாநில விவசாயிகள் தர விழைந்த 10,000 டன்னைப் பொறுத்த வரையிலும், போக்கு வரத்துக் கட்டணத்திற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்ற ஆந்திர விவசாயிகள் சங்கக் கோரிக்கையை இரயில்வே நிர்வாகம் ஏற்றுக் கொள்ளாததால், இதையும் தமிழகத்திற்குக் கொண்டுவர இயலவில்லை.

திரு. என். கே. பழனிசாமி: சார், ஆந்திராவில் 'ப்ரோக்கன் ரைஸ்' ஏராளமான அளவு விலைபோகாமல் இருக்கிறது என்று சொல்லப்பட்டது. அதை நம்முடைய மாநிலத்திற்கு வாங்க

சர்க்கார் முயற்சி செய்ததா? உபரியாக இருக்கக்கூடிய 'ப்ரோக்கன் ரைஸை' இறக்குமதி செய்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆந்திர விவசாயிகள் தமிழ் நாட்டிலுள்ள பஞ்சத்தைப் பார்த்து, மனமிரங்கி, நெல், அரிசி, வைக்கோல் ஆகியவைகளைத் தருவதாகச் சொன்னார்கள். அதை மத்திய அரசு மறுத்துவிட்டது. ஆந்திர அரிசியை மற்ற மாநிலங்களுக்கு அனுப்ப அவர்கள் தயாராக இருந்தாலும் மத்திய அரசு ஒவ்வொரு மாநிலத்திற்கும் இவ்வளவு என்று நிர்ணயித்து, அவர்களுடைய ஃபுட் கார்ப்பரேஷன் மூலம் தருகிறார்கள். அதிலே ஓரளவு நமக்குக் கிடைத்திருக்கிறது.

நாட்டறம்பள்ளியில் துணைப் பதிவாளர் அலுவலகம்

* 156 வினா—திரு. ஜி. ராமசாமி: } மாண்புமிகு வருவாய்த்
திரு. டி. சி. திம்மராய கவுண்டர்: }
துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்டறம்பள்ளியில் துணைப் பதிவாளர் அலுவலகம் தொடங்கும் யோசனை அரசுக்கு உண்டா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Spare parts for buses

* 157. *Q.*—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to set up a Centralised Organisation to purchase spare parts and maintain inventory control for all the State Transport Corporations; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.